கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

O.S. 7/2015

Date:16.02.2023

**வா.சா.1**

**பெயர். வசந்தி**

சாட்சி அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**முதல் விசாரணை தொடர்ச்சி**

வாதி பெயரிலான கணினி பட்டா ( பட்டா எண். 2202) தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ. 8, ( வாசா.ஆ. 7 ஆவணம் கிராம நிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதனால் அந்த ஆவணம் குறியீடு செய்ய பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. ) பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு வயது 45. எனது தாத்தா பெயர் வைத்தியலிங்கம். எனது பாட்டி பெயர் கண்ணம்மாள். அவர்களுக்கு கண்ணன், ராமலிங்கம், பழனி ஆகியோர் ஆண் மக்கள். குமார் என்று எந்த மகனும் உண்டா என்றால் கிடையாது. ராமலிங்கம் மனைவி பெயர் சரோஜா. சரோஜா எனது அம்மா. ராமலிங்கம்தான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி. எனது அம்மா உயிரோடு இல்லை. 2 வருடங்களுக்கு முன்பு இறந்தார். இறந்த தேதி நினைவில்லை. வழக்கு தாக்கல் செய்யும்போது எனது தாயார் உயிரோடுதான் இருந்தார். ரமேஷ், சுரேஷ் எனது சகோதரர்கள் என்றால் சரிதான். ரமணி, ரேவதி ஆகியோர் எனது சகோதரிகள் என்றால் சரிதான். சுரேஷ் 15 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார். அவருடைய மனைவி சுபா 6ம் பிரதிவாதி என்றால் சரிதான். அவரது மகள் சாருமதி 7ம் பிரதிவாதி என்றால் சரிதான். 8ம் பிரதிவாதி அர்ஜுனக்கவுண்டர் ரமேசின் மாமனார் என்றால் சரிதான். ரமணி 3 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகள் 9 முதல் 12 வரை பிரதிவாதிகளான சிவக்குமார், அஷ்வினி, வினோதினி, மகாலட்சுமி என்றால் சரிதான். ரேவதி 15 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவரது கணவர் ஏழுமலை 3 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். வழக்கு தாக்கல் செய்யும்போது உயிரோடு இருந்தார். ( சாட்சி தனக்கு சரியாக நினைவில்லை என்று திரும்ப கூறுகிறார்.) வழக்கு தாக்கல் செய்து 8 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது என்றால் சரிதான். ஏழுமலை எப்போது இறந்தார் என்று எனக்கு நினைவில்லை. 4, 5 பிரதிவாதிகளான அஜித், அருண் ஆகியோர் ஏழுமலையின் பிள்ளைகள் என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் எல்லாம் எனக்கு எனது அப்பா சொன்னார். வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய பத்திரங்களை எனது அப்பா கொடுத்தாரா

என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்கள் எனது அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றால் எனது பாட்டி சொத்தில் எனது அப்பா அவர்களது சகோதரர்களுடன் பாகம் பிரித்து கொண்டதில் கிடைத்த சொத்து. மேலும் எனது அப்பாவும், பெரியப்பா, சித்தப்பாவும் சேர்ந்து வாங்கி பின்னர் பாகம் பிரித்துக்கொண்ட சொத்து. வைத்தியலிங்கத்தை நான் பார்த்ததில்லை. எனது பாட்டி கண்ணம்மாளை பார்த்துள்ளேன். எனது பாட்டி எப்போது இறந்தார் என்று எனக்கு சரியாக நினைவில்லை. எனக்கு 37 வயதிருக்கும்போது இறந்தார் என்று கருதுகிறேன். எனது அப்பா, பெரியப்பா, சித்தப்பா ஆகியோர் பாகம் பிரித்துக்கொள்ளும் தேதியில் எனது பாட்டி உயிரோடு இருந்தார். வைத்தியலிங்கம் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவருக்கு சொத்துக்கள் கிடையாது என்றால் அது எனக்கு தெரியாது. எனது அப்பா எனது பெயருக்கும், எனது அக்கா ரமணி பெயருக்கும் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். என்ன தேதியில் எழுதி வைத்தார் என்றால் 07.12.2012 ல் என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். அந்த செட்டில்மெண்ட் 19.03.2013 ல் எனது அப்பா ரத்து செய்தார் என்றால் எனக்கு நினைவில்லை. அந்த செட்டில்மெண்ட் மற்றும் ரத்து பத்திரம் ஆகியவற்றை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன். 3 ம் பிரதிவாதி பெயரில் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. 3 ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் மூலம் எழுதி வைக்கப்பட்ட சொத்துக்களை நான் சேர்த்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. அந்த சொத்துக்களை 3 ம்பிரதிவாதி அனுபவிக்கிறார் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி பெயரிலான செட்டில்மெண்ட் பத்திரத்தையும் எனது அப்பா ரத்து செய்துவிட்டு எனது அண்ணனின் மாமனாரான 8 ம் பிரதிவாதி அர்ஜுனக்கவுண்டருக்கு கிரையம் எழுதி கொடுத்துவிட்டார். அர்ஜுனக்கவுண்டர் பெயரில் எத்தனை கிரையம் ஏற்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. எந்த எந்த சொத்துக்கள் அவருக்கு எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதுஎ ன்று எனக்கு தெரியாது. 8 ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரங்கள் செல்லாது என்றும், அவற்றை ரத்து செய்ய வேண்டும் என்றும், நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் பாகம்தான் கேட்கிறேன். எனது பெயரில் எழுதப்பட்ட செட்டில்மெண்டை ரத்து செய்தது தவறு என்றும் நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். 15.12.1999 ல் எனது தகப்பனார் கண்ணதாசன் என்பவருக்கு வழக்கில் சேர்க்கப்படாத சொத்தை கிரையம் செய்து கொடுத்தாரா என்றால் தெரியாது. கண்ணதாசன் 14.06.2006 ல் சிவக்குமார் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அதுதெரியும். அது எத்தனை ஏக்கர் என்று எனக்கு தெரியாது. அந்த சொத்தை அப்பாவும் எனது அண்ணனும், அப்பாவும் சேர்ந்து கிரையம் கொடுத்தார்கள். எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. கிரையம் கொடுத்தபோதே கிரையம் கொடுக்கப்பட்டவிவரம் எனக்கு

தெரியும். 8 ம் பிரதிவாதிக்கு எனது அப்பா கிரையம் கொடுத்து 1 மாதம் கழித்து அந்த விவரம் எனக்கு தெரியவந்தது. அந்த சொத்தில் எனக்கும் பாகம் உண்டு என்றும், என்னிடம் கலந்து ஆலோசிக்காமல் ஏன் கிரையம் கொடுத்தீர்கள் என்று எனது அப்பாவிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். எனது அண்ணனின் பாகத்தை மட்டும் கிரையம் கொடுக்க தன்னை அழைத்து சென்றார்கள் என்றும், பிற்பாடுதான் எல்லா சொத்தையும் எழுதி வாங்கி கொண்டார்கள் என்றும் எனது அப்பா சொன்னார். அர்ஜுனன் வழக்கு நிலுவையில் இருக்கும்போது அவர் இறந்ததால் 13 முதல் 16 வரை பிரதிவாதிகளை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அரர்ஜுனனுக்கு கிரையம் கொடுத்த சொத்துக்களை 13 முதல் 16 வரை பிரதிவாதிகள் அனுபவிக்கிறார்கள் என்றால் இல்லை எனது அண்ணன் மட்டும்தான் அனுபவிக்கிறார். அந்த சொத்துக்களுக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களுக்கு அர்ஜுனன் பெயரில் மாறி அவரது பெயரில் தான் தீர்வை செலுத்தி வருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 8 ம் பிரதிவாதிக்கு கிரையம் எனது அப்பா மட்டும் தனியாக எழுதி கொடுத்தாரா அல்லது எனது அப்பாவும், எனது அண்ணன் ரமேஷ் சேர்ந்து எழுதி கொடுத்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அர்ஜுனக்கவுண்டர்தான் அவரது பெயரில் பட்டா மாற்றி கொண்டு அவரது அனுபவத்தில்தான் இருந்து வந்து அவர் இறந்துபிறகு 13 முதல் 16 பிரதிவாதிகளின் அனுபவத்தில் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. 14 வது பிரதிவாதி வளர்மதி 2 ம் பிரதிவாதி ரமேசின் மனைவி ஆவார். சொத்து குடும்பத்தை விட்டு 8 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டதால் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். எனது அக்கா ரமணி, ரேவதி ஆகியோரும் அந்த சொத்துக்களை அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா இன்று நீதிமன்றம் வந்துள்ளாரா என்றால் இல்லை. 8 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்படாத சொத்துக்கள் என்ன என்று எனக்கு தெரியாது. நான் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். வா.ச-.ஆ. 1 பாகப்பத்திர அசல் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ராமலிங்கம் பெயரில் பெறப்பட்டுள்ளது. எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் அடிப்படையில் நாங்கள் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றும், அசல் பத்திரத்தையும் எனது தகப்பனார் எங்களிடம் ஒப்படைக்கவில்லை என்றும், தற்போது எனது அப்பா ஆவணங்கள் கொடுத்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா-ஆ.4 , 5 சான்றிட்ட நகல்கள் ராமலிங்கம் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரையம் வாங்கிய சிவக்குமார் என்பது எனது அக்கா ரமணியின் கணவர். அந்த கிரைய சொத்து வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ. 3 செட்டில்மெண்ட் ரத்துபத்திர சன்றிட்ட நகல் சிவக்குமார் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா-ஆ.6, 7 நகல்கள்

என்பதால் அந்த ஆவணங்கள் அனுமதிக்கதக்க ஆவணங்கள் அல்ல என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அண்ணன் ரமேஷ் என்பவருக்கும், எனக்கும் 15 ஆண்டுகளாக பேச்சு வார்த்தை இல்லை. எனது அப்பா, அம்மாவை அவர் அடித்ததால் பேச்சுவார்த்தை இல்லை. எனது பாட்டி எனது அண்ணன் வீட்டிற்கு சென்றபோது அவரை கழுத்தை பிடித்து வெளியே எனது அண்ணன் தள்ளிவிட்டார். அதுபற்றி கேட்கபோன எனது அப்பா, அம்மாவையும் அடித்துவிட்டார். அதனால்தான் நான் அவரிடம் பேசுவது கிடையாது. எனது தகப்பனார் தன்னிடம் அர்ஜுனக்கவுண்டரும், எனதுஅண்ணன் ரமேசும் தன்னை ஏமாற்றி கிரைய ஆவணம் பதிந்து கொண்டார்கள் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களே அல்ல என்றும், எனக்கு பாகம் கேட்க எவ்வித உரிமை இல்லை என்றும், வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.